சார்பு நீதிமன்றம், சங்ககிரி
முன்னிலை :- திரு. ந. பன்னீர்செல்வம், B.A., B.L.,
சார்பு நீதிபதி, சங்ககிரி
2026-ம் வருடம் மார்ச் மாதம் 10-ம் நாள் செவ்வாய்க்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057, விசுவாவசு வருடம், மாசி மாதம் 26-ம் நாள்)
அசல் வழக்கு எண்.166/2018
(CNR No.TNSA070006602018)

K. தங்கராசு ...வாதி

// எதிராக //

பரமேஸ்வரி ...பிரதிவாதி

இவ்வழக்கானது கடந்த 12.10.2018 ல் தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினமே கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணையில் இருந்து வந்த நிலையில் கடந்த 24.02.2026-ம் தேதியன்று என் முன்னால் இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு D. சந்திர சேகரன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் K.M. வெங்கடாசலம், K. ராதிகா, ஆகியோர்கள் முன்னிலையாகியும், வாதி தரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்காவணங்களையும், விசாரிக்கப்பட்ட சாட்சியின் சாட்சியங்களையும் பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

## // தீர்ப்புரை //

வாதி இந்த தாவாவை, தாவா தொகை ரூ.4,76,175/- ம் அதில் அசல் ரூ.3,50,000/- க்கு பின்வட்டி தாவா தாக்கலான நாளில் இருந்து தொகை பைசலாகும் நாள் வரை ஆண்டொன்றுக்கு 18% கணக்கிட்டு, செலவுத்தொகையுடன் வாதிக்கு, பிரதிவாதி செலுத்தவேண்டும் என்று கோரி தாக்கல் செய்துள்ளார்.

2. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:-

இத்தாவா பிரதிவாதி கடந்த 10.10.2016-ம் தேதி வாதியிடம் ரூ.3,50,000/- கடனாக பெற்று கொண்டு, மேற்படி கடன் தொகையை 18 சதவிகித வட்டியுடன் சேர்த்து திருப்பி கொடுத்துவிடுவதாக ஒப்புக்கொண்டு வாதி பெயருக்கு ஒரு கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்தார். ஆனால் தாவா கடனை திருப்பி செலுத்தும்படி பல முறை வாதி பிரதிவாதியிடம் கேட்டும் பிரதிவாதி கடனை திருப்பி செலுத்தாததால், வாதி கடந்த 20.08.2018- அன்று ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அதை

பிரதிவாதி வாங்க மறுத்ததோடு கடனையும் திருப்பி செலுத்தவில்லை. எனவே வாதி இத்தாவாவை தாக்கல் செய்துள்ளார்.

3. **பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் சுருக்கம்**:-

இத்தாவா சட்டப்படிக்கும், பொருண்மைப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. இப்பிரதிவாதி எதிர்வழக்குரையில் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர பிற சங்கதிகளை வாதியே மெய்பிக்க கடமைப்பட்டவர் ஆவார். இத்தாவா வாதியிடம் பிரதிவாதி ரூ.3,50,000/- கடனாக பெற்று கொண்டு, அதற்கு ஆதரவாக 10.10.2016 இல் தாவா கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்ததாக சொல்வது பொய்யானது ஆகும். வாதி சொல்வதுபோல் பிரதிவாதி, வாதியிடம் ஒருபோதும் கடன் வாங்கிகொண்டு கடனுறுதி சீட்டை எழுதி கொடுக்கவில்லை. துர்லாபம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தால் வாதி பொய்யான கடனுறுதி சீட்டை உற்பத்தி செய்து இத்தாவாவை தாக்கல் செய்துள்ளார். இத்தாவா எவ்வகையிலும் நிலைக்கத்தக்கது அல்ல. தாவா தள்ளுபடியாகத்தக்கது ஆகும்.

4. வழக்குரை மற்றும் எதிர் வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் வழக்கின் பிரச்சனையை தீர்வுக்காண்பதற்காக கீழ்கண்ட வழக்கெழு வினாக்கள் வனையப்பட்டன:-

1. வாதி தாவா தொகை ரூ.4,76,175/-ம் அதில் அசல் தொகை ரூ.3,50,000/-க்கு பின்வட்டி தாவா தாக்கலான நாளில் இருந்து தொகை செலுத்தி ஆண்டொன்றுக்கு 18 சதவீதம் முடிக்கும்வரை வரை பெற உரியவரா?
2. தாவா கடனுறுதிச்சீட்டு அதன் பிரதி பிரயோஜனத்திற்கு ஆதரவாக இல்லை என்பது சரியா?
3. தாவா கடனுறுதிச்சீட்டு அதை எழுதியவர் மற்றும் சாட்சி கையெழுத்திட்டவர் துணையுடன் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்று சொல்வது சரியா?
4. வாதி தாவா செலவு தொகை பெற உரியவரா?
5. வாதிக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன.

5. **வழக்கெழு வினா எண்.1 முதல் 4:-**

வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் கடந்த 10.10.2016-ம் தேதி வாதியிடம் பிரதிவாதி ரூபாய் 3,50,000/- கடனாக பெற்றுக்கொண்டு, அன்றைய தினமே வாதி பெயருக்கு ஒரு கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்ததாகவும், மேற்படி கடனை 18 சதவிகித வட்டியுடன் சேர்த்து கேட்கும்பொழுது திருப்பி செலுத்திவிடுவதாக ஒப்புக்கொண்டதாகவும், ஆனால் கடனை திருப்பி செலுத்துமாறு வாதி கேட்டபோது பிரதிவாதி திருப்பி செலுத்தாததால், கடந்த 20.08.2018 இல் வாதி

வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியபோதும் பிரதிவாதி அதை வாங்க மறுத்துவிட்டதாகவும், குறிப்பாக வாதமுன் வைக்கப்பட்டுள்ளது.

6. மாறாக, பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் வாதி சொல்வது போல கடந்த 10.10.2016 ஆம் தேதி பிரதிவாதியிடம் வாதி கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், தாவா கடனுறுதி சீட்டை எழுதி கொடுக்கவில்லை என்றும், தாவா கடனுறுதி சீட்டானது துர்லாபம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்றும், குறிப்பாக எதிர் வாதம் செய்யப்பட்டு உள்ளது. ஆகவே இத்தாவாவை பொறுத்தவரை கடந்த 10.10.2016 ஆம் தேதி வாதியிடம் பிரதிவாதி ரூ.3,50,000/- கடனாக பெற்றுகொண்டு அதற்கு ஆதாரமாக அன்றைய தினமே வாதி கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்துள்ளார் என்பதையும் அதனை வாதி திருப்பி செலுத்துமாறு கேட்டபோது பிரதிவாதி அதை செய்ய மறுத்துவிட்டார் என்பதையும் பொறுத்து, முதல் மெய்பிக்க வேண்டிய சுமை இந்திய சாட்சிய சட்டம் பிரிவு.101 இன் கீழ் வாதிக்கே உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. அத்தகைய முதலில் மெய்பிக்கும் சுமையை தீர்க்கும் பொருட்டு வாதி தங்கராசு வா.சா.1 ஆகவும், ஒரு முத்து என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளதோடு, 10.10.2016 ஆம் தேதியிட்ட கடனுறுதி சீட்டு அசல் வா.சா.ஆ.1, ஆகவும்,. 20.08.2018 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகவும், திருப்பப்பட்ட அஞ்சல் உறைகள் முறையே வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 வரையாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட வாதி தங்கராசு தனது முதல் விசாரணை சாட்சியத்தில் வழக்குரை சங்கதிகளை ஒட்டியும் எதிர் வழக்குரை சங்கதிகளை மறுத்தும் சாட்சியம் அளித்துள்ளார். அதாவது கடந்த 10.10.2016 அன்று பிரதிவாதி தன்னிடம் ரூ.3,50,000/- கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ரூபாய்.100 க்கு ரூபாய்.1.50/- வீதம் வட்டியுடன் சேர்த்து திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு, வாதி கடனுறுதி சீட்டை எழுதிக்கொடுத்ததாகவும், ஆனால் நேரிலும் வழக்கறிஞர் அறிவிப்பு மூலமாகவும் கடனை திருப்பி செலுத்துமாறு கேட்டும் பிரதிவாதி கடனை திருப்பி செலுத்தவில்லை என்றும் குறிப்பாக சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட முத்து வா.சா.1 இன் சாட்சியத்தை உறுதியூட்டம் செய்யும் விதமாக சாட்சியளித்துள்ளார். மேற்படி சாட்சிகள் இருவரையும் பிரதிவாதி தரப்பில் குறுக்கு

விசாரணை செய்யப்பட்ட போதிலும் அவர்களின் நம்பகத்தன்மை எவ்வகையிலும் பாதிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் கருத இயலவில்லை.

8. இவ்வழக்கில் தாவா கடனுறுதி சீட்டை தான் எழுதி கொடுக்கவில்லை என பிரதிவாதி மறுத்துரைத்துள்ளார் என்றாலும், அதில் உள்ள கைரேகை மற்றும் கையெழுத்து தன்னுடையது இல்லை என குறிப்பாக மறுத்துரைக்கவில்லை. அதனால் பிரதிவாதி அவற்றை ஒப்புப்கொண்டு விட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனினும் வா.சா.ஆ. 1 கடனுறுதி சீட்டை தான் எழுதி கொடுக்கவில்லை என பிரதிவாதி மறுத்துரைத்துள்ளதால், அந்த கடனுறுதி சீட்டு பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்டதுதான் என்பதை வாதி மெய்பித்துள்ளாரா என பரிசீலிக்கும்போது, வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள வாதி மட்டுமல்லாது வா.சா.ஆ.1 இல் சாட்சி கையொப்பமிட்ட முத்து என்பவரும் அவரது சாட்சியத்தில் வா.சா.ஆ.1 ஐ பிரதிவாதி தகுந்த பிரதி பிரயோஜனம் பெற்றுகொண்டுதான் எழுதி கொடுத்தார் என நேரடியாகவும் தெளிவாகவும் குறிப்பிட்ட சாட்சி அளித்திருப்பது தெரியவருகிறது.

9. இதன் மூலம் வா.சா.ஆ 1 கடனுறுதி சீட்டை பிரதிவாதிதான் எழுதி கொடுத்துள்ளார் என்பதை வாதி மெய்படுத்தி விட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது. அவ்வாறு வா.சா.ஆ 1 பிரதிவாதியால் எழுதி கொடுக்கப்பட்டது என்பதை வாதி மெய்பித்துள்ள நிலையில் மாற்று முறைஆவணங்கள் சட்டம் பிரிவு 118 இன் கீழான அனுமானம் வாதிக்கு சாதகமாக எழுகின்றது. அத்தகைய அனுமானத்தின் அடிப்படையில் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டானது அதில் குறிப்பிட்டுள்ள பிரதி பிரயோஜனத்தை பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட தேதியில் வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்துள்ளார் என்றே இந்நீதிமன்றம் அனுமானிக்க வேண்டியுள்ளது.

10. அவ்வாறு வாதிக்கு சாதகமாக சட்டபடியான அனுமானம் எழுந்துள்ளது என்றபோதிலும், அது இறுதியானது இல்லை என்பதோடு, அதனை பொய்பிக்கும் உரிமை பிரதிவாதிக்கு உள்ளது என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. அந்தவகையில் பிரதிவாதி மீது எழும் மெய்பிக்கும் சுமையை அவர் தீர்த்துள்ளாரா என்பது குறித்து பரிசீலித்து பார்க்கும்போது, அதன் பொருட்டு பிரதிவாதி பரமேஸ்வரி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் வாதியிடம் கடன் வாங்கியதையும் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்ததாக சொல்வதையும்

மறுத்து சாட்சியம் அளித்துள்ளார். அதேசமயம் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு, போலியாக தயார் செய்யப்பட்டது என குறியிட்டு சொல்லி இருந்தாலும் அதற்கான அவசியம் வாதிக்கு எதனால் எழுகின்றது என்பது குறித்து பிரதிவாதி தனது சாட்சியத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை. பிரதிவாதியின் எதிர்வாதமும் சாட்சியமும் பெயரளவிலும், மேம்போக்காகவுமே உள்ளது. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகை மற்றும் கையெழுத்தை பிரதிவாதி குறிப்பாக மறுத்துரைக்க தவறியுள்ள நிலையில், வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பமிட்ட வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட முத்து என்பவரின் சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு, தகுந்த பிரதிபிரயோஜனத்திற்காக பிரதிவாதியால் வாதி பெயருக்கு எழுதி கொடுக்கப்பட்டது தான் என்றும் அது வாதியால் மோசடியாக தயார் செய்யப்பட்டதென வாதி சொல்வதில் உண்மை இல்லை என்றும் அதனால் வாதி இத்தாவாவில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கது தான் என்றும் மேற்படி எழுவினாக்கள் 1 முதல் 3 க்கு வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

11**. <u>எழுவினா: 4 மற்றும் 5</u>**

இத்தாவாவின் தன்மையை கருத்தில் கொண்டு பார்க்கும் போது வாதிக்கு தாவா செலவு தொகை கிடைக்கதக்கது தான் என்றும் ஆனால் வாதி இத்தாவாவில் கோரியுள்ள முதன்மையான பரிகாரம் அவருக்கு வழங்கப்பட்டுவிட்டதால் வாதிக்கு இத்தாவாவில் வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது இல்லை என மேற்படி எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

முடிவாக, மேலே விவரிக்கப்பட்ட காரணங்கள் அடிப்படையில், இத்தாவா அனுமதிக்கப்பட்டு தாவா தொகையான ரூ.4,76,175/- மும், அசல் தொகையான ரூ.3,50,000/-திற்கு இத்தாவா தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9 சதவிகித வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை முழுவதும் செலுத்தி முடிக்கும் வரை 6 சதவிகித வட்டியும் மற்றும் தாவா செலவு கொகையுடன் சேர்த்து பிரதிவாதி வாதிக்கு இன்றிலிருந்து 2 மாத காலத்திற்க்குள் செலுத்த வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026-ம் வருடம் மார்ச் மாதம் 10-ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANNEERSELVAM N
Norms of February 2026
Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.03.10 17:11:46 +0530

சார்பு நீதிபதி,
சங்ககிரி.

இணைப்பு:-

1. வாதி தரப்பு சாட்சிகள்:-

வா.சா.1 – தங்கராசு த/பெ. கந்தசாமி,
வா.சா.2 – முத்து, த/பெ. ஆறுமுகம்

2. வாதி தரப்பு சான்றாவணங்கள்:

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ. 1 | 10-10-2016 | கடனுறுதி சீட்டு | அசல் |
| வா.சா.ஆ. 2 | 20-08-2018 | வழக்கறிஞர் அலுவலக அறிவிப்பு | வழக்கறிஞர் அலுவலக நகல் |
| வா.சா.ஆ. 3 | | திருப்பி அனுப்பட்ட அஞ்சல் உறை | அசல் மற்றும் நகல் |
| வா.சா.ஆ. 4 | | திருப்பி அனுப்பட்ட அஞ்சல் உறை | அசல் மற்றும் நகல் |

3. பிரதிவாதி தரப்பு சாட்சி:-

பி.வா.சா.1 – பரமேஸ்வரி, த/பெ. முருகேசன்.

பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை.

PANNEERSELVAM N
Norms of February 2026
Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.03.10 17:12:01 +0530

சார்பு நீதிபதி,
சங்ககிரி.